REGD. No. M. 6311

PHONE No. 85680

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 116

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்.
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசிமீ 11உ செவ்வாய் (27—10—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசிமீ 12உ புதன் (28—10—53)

கொச்சி தனலட்சுமி சோறு, நீர் கொள்ளாதது 'முன்வினை'ப் பயனும்!

இந்துமத 'கர்மவினை'க் கொள்கைக்கு சப்பைக் கட்டுகட்டப் பார்க்கும் சதிச் செயல்!

மருத்துவ சோதனை கூடாது என்று மடைமையை வளர்க்க வக்காலத்து

மதநோக்கு விஞ்ஞானத்துக்கு வைரி என்பதற்கான எடுத்துக் காட்டு!

இராமகிருஷ்ண மடத் துறவியின் மாய்மாலம்!

குடகு நாட்டைச் சேர்ந்த 'மர்மப் பெண்'ணின் மர்மத்தை, நிச்சயமாக, நவீன மருந்துகளாலும், மருத்துவக் கருவிகளாலும், மருத்துவர்களாலும் கண்டறிய முடியாது. அது ஒரு வீண் முயற்சி. சந்தர்ப்பவசமாக, அவள், மற்ற மனிதப் பிறவிகளைப் போல் உணவு உட்கொள்வதில்லை, இந்த மருத்துவர்களுக்கு என்ன இயற்கைக்கு அப்பாற்பட்ட இலாபம் கிடைத்துவிடப் போகிறது? ஏனெனில், அவள் ஒன்றும் உணவுக்காகக் கூச்சலிடவில்லை.

அவளுடைய முந்திய பிறவிகளில், அவள், ஆத்மப் பயிற்சிகள் பலவற்றைப் பயின்று, அவை முடிக்கப்படாமற் போகவே, இப்பிறவியில், உணவு உட்கொள்ளாமலே வாழ்வதற்கான, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியோடு, இப்போது பிறந்திருக்கலாம்.

நாம் அவளை ஒரு சிறந்த சந்நியாசினியின்கீழ் ஒரு ஆசிரமத்தில் இருக்கச் செய்து, உறங்கிக் கிடக்கும் அவளது ஆத்ம சக்தியைத் தட்டி எழுப்ப உதவினால், அவள், ஆத்மப் பயிற்சியை முடித்து வாழ்க்கையின் இலட்சியமான 'சுவர்க்கத்தில்' நுழைய முடியும்.

நான், சர்க்காரையும் மருத்துவர்களையும், இந்த வேண்டாத வேலையான, அப்பெண்ணைத் தொந்திரவு செய்வதை நிறுத்திவிடக் கோருகிறேன். மருந்துகளினாலோ, மருத்துவ விசாரணையினாலோ குணப்படுத்தக்கூடிய நோயாளியல்ல அவள்.

காற்றை மட்டும் உட்கொண்டு உயிர்வாழ்ந்த 'பவஹரி பாபா' என்ற முனிவரைப்பற்றி நாம் கேள்விப்பட்டதில்லையா, என்ன? அத்யாத்ம இராமாயணத்தில், 'ஸ்வயம் பிரபா' என்ற பெண், அழகான பாதாளக் குகையொன்றில், உணவே உட்கொள்ளாது, தவங்கள் செய்ததாகப் படித்திருக்கிறோம். ஒருவர், உணவின்றி வாழ முடியும். யோக சாஸ்திரம் அதற்கான மார்க்கங்களையும் உடையது. பதஞ்சலி, தனது யோக சாஸ்திரத்தில், என்ன சொல்கிறாரெனப் பார்ப்போம்: "கந்தக கூபீக் ஷூட்பி பாசனி விர்த்தி"—'தொண்டைக் குழியில் செய்கிற சம்யமம், பசியைப் போக்கும்'—(அத். 3; சுலோ. 31)

இந்தசம்யமசக்தி,அப்பெண் தனது முற்பிறப்புகளில் திரும்பத் திரும்பச் செய்த ஆத்மப் பயிற்சியினால் ஏற்பட்டு, இப்போது அப்பெண்ணை அறியாமலேயே அப்பெண்ணிடம்மறைந்திருந்து வேலை செய்யலாம். யோகபாதையில் அப்பெண்பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அதை முடிக்கவே மீண்டும் பிறந்திருக்கிறார்.

ஹிந்து பாரம்பரையின் நாள்பட்ட ஆத்ம வாழ்க்கைக்கு எதிராக அப்பெண் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. அப்பெண் அமைதியாகவும், மகிழ்ச்சியாயும், இவ்வுலகத்தாருக்குத் தெரியாமலேயே வாழட்டும்.

—சுவாமி போதகானந்தா,
ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
வீரபத்தபுரம்,
இராஜமகேந்திரபுரம்.
—'இந்து': 25-10-53.

"மாயவரம் 'மயிலாடுதுறை' ஆக மாற வேண்டும்"

கோவையில் பேராசிரியர் சேதுப்பிள்ளை

கோவை, அக். 25—
பி. எஸ். ஜி. கல்லூரிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற தமிழ் விழாவின் இரண்டாவது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ரா. பி. சேதுப் பிள்ளை பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ் நாட்டில் நல்ல தமிழ்ப் பெயர்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. 'மயிலாடுதுறை' என்னும் அழகான பெயர், சாகாவரம் என்று பொருள் படும் வகையில், "மாயவரம்" என்று சிதைக்கப்பட்டிருக்கிறது. ஊர்ப் பெயர்கள் வேறு மொழியில் இருந்தால், அதை அழிக்க விரும்புகிறவர்கள். 'மாயவரம்' என்ற பெயரையும் அழிக்க முன்வர வேண்டும்", என்றார்.

ஜனநாயக வாக்காளர்!

(இந்தியா பிராண்ட்)

"ராஜாஜியின் மந்திரி சபையின்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லக்கூடியவர்கள் அனைவரும் பாகிஸ்தானுக்குச் சென்று விடுவது தான் சிறந்தது.'

—திருமங்கலத்தில்
ஏ. பி. வி. பெரிய குருவா
ரெட்டியார்
'தமிழ் நாடு': 27-10-53

நடுநிலைமைக் குழு நம்பிக்கை தளர்கிறது

பான்முன்ஜாம், அக். 26—
கொரியா நடுநிலைமைக் குழுவின் தலைவர் கே. எஸ். திம்மையா, இன்று அக்குழுவின் இரண்டு மணி நேரக் கூட்டத்திற்குப் பின் ஒரு பேட்டியில் பேசுகையில், "கமிஷன் எதற்காக நிறுவப்பட்டதோ இனி அவ்வேலையைச் செய்ய முடியாத சட்டத்தை குழு அடைந்திருப்பதாயும், கைதிகளுக்கு விளக்கம் கூறும் வேலையை திரும்ப ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் கடினமாகக் காணப்படுவதாகவும் கூறியுள்ளார்.

ஊருக்கு உபதேசம்

✶

"நமது பொருளாதார அமைப்பைப் பாதுகாக்கும் பொருட்டு, ஊழியர்களைக் கட்டாய சேவைக்குத் திரட்ட வேண்டும்; நபர் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ. 1,000 கொடுத்து, பத்து லட்சம் பேரைச் சேர்த்து கிராமங்களுக்கு அனுப்பி, அன்பையும், அமைதியையும் பரப்பச் செய்யவேண்டும். இதனால் ரூ. 500 கோடிதான் செலவாகும்."

—சி. ஆர். சீனிவாசன்.
'சு. மி.': 24-10-53

"டில்லி—ஓர் வனுந்திரம்!"

★

புதுடெல்லி, அக். 26—
பண்டித நேரு, இன்று, மத்திய நீர்ப்பாசன, மின்சார போர்டு மாநாட்டில் பேசுகையில், நிர்வாக இலாகா 'ஓர் வனுந்திரம்' என்றார்.

"இந்த நிர்வாகவனுந்திரத்தை பெருக்கும் போக்கு சகிக்க முடியாததாகி விட்டது; வேலை செய்வதைவிட அதிகாரத்தைக் காட்டுவதிலேயே அதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. கைகால்கள் பெருத்து தலை மட்டும் பெருக்காமல் சிறியதாக இருந்தால் அது உண்மையான 'நலம்' ஆகா. டில்லி, நிபுணர்கள் அடங்கிய ஒரு 'வனுந்திரமாகி' வருவதாகவும், இந்த நிர்வாக குழப்பத்தில் நிலை தடுமாற்றம் ஏற்படுவதாக"வும் குறிப்பிட்டார்.

இராணுவத்தினர் பள்ளி ஆசிரியர்களாவார்களாம்!

காந்தியின் கொள்கைக்கு நேருவின் காணிக்கை!

★

டெல்லி, அக். 25—
மத்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா, புதிய பள்ளிகளை துவக்குதல், கிராமப் பகுதிகளில், கல்விச் சாலைகளை விஸ்தரித்தல், நகரங்களில், சமுதாயக் கல்விப் பகுதிகளை திறப்பது ஆகியவை மூலம் 80,000, படித்த முன்னாள்—ராணுவத்தினருக்கு வேலை தரும் திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாக, இன்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 1953—54ல், 30,000 ஆசிரியர்களும், 1954—55ல், 50,000 ஆசிரியர்களும் வேலைக்கு நியமிக்கப்படுவார்கள்

ஆசிரியர்களைப் பொறுக்கி எடுப்பது மாநில அரசுகளே. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

"வெள்ளையர் ஆட்சி காலத்தைக் காட்டிலும் இப்போது வேலையாட்கள் அதிகம்"

பண்டித நேரு ஒப்புக்கொள்கிறார்

புதுடெல்லி, அக். 26—
"எடுத்ததற்கெல்லாம் வேலையாட்களை ஏவிவிடும் வழக்கம் ஒழியும் வரை டில்லி அரசாங்கக் காரியாலயத்தில் சிக்கனம் இருக்கப் போவதில்லை."

"அடுத்த அறையில் இருப்பவர்களுக்கு ஆள்வசம் குறிப்புகளை அனுப்பவேண்டியதில்லை. நேரிலோ, டெலிபோன் மூலமாகவோ பேசி முடிக்கலாம். யுத்தத்திற்கு முன், டில்லியில் 3,200 பணியாட்கள் இருந்தார்கள்; இப்போது 19000 பேர் இருக்கிறார்கள்."

—இவ்வாறு, பண்டித நேரு, மத்திய நீர்ப்பாசன மின்சார போர்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரக்கர் முகத்துடன் குழந்தை

திருத்தணி, அக் 24—
இன்று காலை திருத்தணி மங்களாம்பிகா நர்சிங் விடுதியில், வேலஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு அரக்கர் தோற்றத்துடன் ஒரு குழந்தை பிறந்து இறந்துவிட்டது. மிகப் பெரிய பற்கள், பெரிய கண்கள், தலையின் பின்புறத்தில் கொம்புகள் போன்ற மாமிச சுழிகளோடு அக்குழந்தை இருந்ததாம்.

ஐவர் சிறையில்!

இன்று

57-வது நாள்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 27—10—1953 செவ்வாய்

இரண்டாம் கட்டம்!

புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து சென்னை மாநில முதலமைச்சர் கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் வீட்டின் முன், குறிப்பிட்ட சில நாட்கள் வரை, மறியல் அறப்போரை நமது தி. மு. கழகம் முன்னின்று நடத்தியது. ஆச்சாரியார், அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார், நமது தி. மு. கழக அறப்போர் காளைகள்மீது. நூற்றுக்கணக்கானவர்களை, இதுபற்றி சிறையில் தள்ளிப் பூட்டினார் ஆச்சாரியார். இந்தப் புதிய கல்வித் திட்ட எதிர்ப்பு நேரடி நடவடிக்கையில், அமைதியான முறையில், நமது கழகம் பங்கு கொண்டதின் விளைவாக, கழகத்தின் சக்தி கொஞ்சம் செலவழிந்து இருக்கிறது.

நான்கு ஆண்டுகளாக நாம் தேக்கி வைத்திருந்த ஜனசக்தி, சிறிய அளவில்தான் இத்துறையில் செலவாகி இருக்கின்றதேயல்லாது வேறு ஒன்றுமில்லை.

நமது அறப்போரின் பலனாக, புதிய கல்வித் திட்டத்தின் பயங்கர விளைவுகளை, மேலும் பல லட்சக்கணக்கான மக்கள் உணர்ந்துகொள்ள வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதுவுமல்லாமல் புதிய கல்வித் திட்டத்தின் மீது, ஏற்கனவே பொதுமக்கள் கொண்டிருந்த வெறுப்பின் வேகம் கணிசமாகக் கூடியிருக்கிறது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

புதிய கல்வி எதிர்ப்புப் போராட்டத்தில் நமது கழகம் ஈடுபட்டதின் காரணமாக, எதிர்ப்பாளர் தொகை கூடியிருப்பதும், எதிர்ப்பின் தரம் உயர்ந்திருப்பதும் ஒரு பக்கம் இருக்க, திராவிட மக்களின் நலன்களை பாதுகாப்பதில் அக்கரையும், பொறுப்பும் கொண்டு பணியாற்றி வருவதில் முன்னணியில் இருப்பது தி. மு. கழகம் மட்டுமேதான் என்று, முன்னமே முடிவுக்கு வந்திருந்த திராவிட மக்களின் கருத்து, இப்பொழுது மேலும் திட்டவட்டமாக உறுதி பெற்றிருக்கிறது என்பது, எல்லாவற்றிலும் முதன்மையாகக் கருதத் தக்கதாகும்.

மேலும் திராவிடப் பெருங்குடி மக்களில் பெரும்பாலோர், நமது தி. மு. கழகத்தின் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவும், கனிவு காட்டவும், பங்கு கொள்ளவும் முன் வந்திருக்கிறார்கள் என்ற சிறந்த உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. இவர்களை அணுகி, நமது கழகக் கோட்பாடுகளை ஐயந்திரிபற விளக்கிக்கூறி, அவர்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நமது தி. மு. கழகத்தின் சொத்தாக ஆக்க நமது கழக முன்னணி வீரர்கள் உட்பட கழகத் தோழர்கள் அனைவரும், உடனடியாக முன்வர வேண்டும்.

இவ்வகையில், 'நாளை பார்த்துக்கொள்ளலாம்' என்ற சபலம் துளியும் நமது கழகத் தோழர்களுக்குக் கூடாது. இந்த ஆக்க வேலை, கழகத்துக்குப் பலம் தேடும் பணி என்பதோடு மட்டுமல்லாமல், நமது கழகத்தின் இறுதி லட்சியத்தை அடைய மேற்கொள்ள வேண்டிய இறுதிப் போராட்டத்திற்கு ஒத்த வகையில், நமது கழகத்தை பலம் பொருந்தியதாக அமைத்துக் கொள்ளும் அரிய செயலுமாகும். எனவே இந்த அரிய வாய்ப்பை நமது கழகத் தோழர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, கழக வளர்ச்சியில் பற்றும், பாசமும் கொண்டுள்ள எல்லாத் தோழர்களையும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அடுத்தது, டால்மியாபுர பெயர் மாற்றப் போராட்டம் இன்னும் இதற்கான அறப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. போராட்டத்தில் கலந்து கொண்ட சில தோழர்கள் மீது சர்க்கார் தொடுத்த வழக்கு இன்னும் முடிவு கூறப்படாமலே இருந்துவருகிறது.

டால்மியாபுரம் என்ற பெயரை கல்லக்குடியாக என் மாற்றி அமைக்கவேண்டும் என்று நமது கழகம் கருதுகிறது, அறப்போராட்டத்தில் குதித்தது என்பதில் பொதிந்துகிடக்கும் பொருளை, அப்பகுதியில் உள்ள மக்களே மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோர் விளக்கிக்கொண்டுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இந்தப் பெயர் மாற்ற நேரடி நடவடிக்கைக்கு, நாம் கொண்டிருக்கும் கண்ணோட்டத்தை பெரும்பான்மையான திராவிட மக்களும் புரிந்துகொள்ளுமாறு செய்வதென்பது அவ்வளவு இலகுவில் முடியக்கூடிய காரியமல்ல. ஆனால், சிரமமான காரியத்தைக் கூட, நமது தி. மு. கழகம், தான் மேற்கொண்ட பெயர் மாற்ற அறப்போராட்டத்தின் காரணமாக, சுலபமாக்கிவிட்டது என்பதை எண்ணிப்பார்க்கிற ஒவ்வொரு கழகத் தோழரும் எப்படிப் பூரிப்படையாமல் இருக்க முடியும்?

எனவே, இப்பெயர் மாற்ற அறப்போராட்டத்தின் முடிந்த வெற்றியை நாம் அடைவதற்கு, மேலும் சில நாள் பிடிக்கும் என்பது உண்மையானாலும், இவ்வகையில் நாம் பெற்றிருக்கும் கண்ணோட்டத்தைப் பல்லாயிரக்கணக்கான திராவிட மக்களும் பெறச்செய்வதில் நாம் நல்லதோர் வெற்றியைப் பெற்றிருக்கிறோம் என்பதை நமது தோழர்கள் மறந்துவிடக்கூடாது. குறிப்பிட்ட ஒரு கண்ணோட்டத்தை, நம்மிடம் நெருங்கிய தொடர்பில்லாத மக்களிடம் தோன்றச் செய்வதென்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதை, நமது கழக வரலாறு நமக்கு அறிவுறுத்திக்கொண்டு இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுதுதான், நமது கல்லக்குடி பெயர் மாற்ற அறப்போருக்குப் பொதுமக்களிடம் கிடைத்துள்ள வெற்றியின் தராதரம் நமக்கு நன்கு விளங்கமாகும்.

நமது, பெயர் மாற்றப் போராட்டத்தின் காரணமாக, நமது கண்ணோட்டத்தைப் பெற்றுள்ள திராவிட மக்கள் விஷயத்தில் நாம் கவலை கொள்ளாமல் இருந்துவிடக் கூடாது. அவர்கள் கருத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாறுதலை நமது கழகத்துக்கு அரணாக அமைத்துக்கொள்ள நாம் முன்வர வேண்டும். கழகத்தைப் பலப்படுத்தினால்தான், நமது கோட்பாட்டின் வெற்றியைத் துரிதமாக்க முடியும் என்ற உண்மை தெரியாதவர்களும் அல்ல நமது கழகத் தோழர்கள். ஆதலால், நமது கழகத்தை இன்னும் திராவிட மக்களின் ஒரே ஒரு அரசியல் கட்சியாக்கும் பணியில் தங்களுடைய முழு கவனத்தையும், கருத்தையும் இனி செலவிட முனையவேண்டும் என, நமது தோழர்களை, வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மூன்றாவது போராட்டம், தமிழர்களின் எதிர்ப்புணர்ச்சியை அலட்சியப்படுத்தி அவமதித்துப் பேசிய இந்தியப் பிரதமர் நேருவுக்குப் பாடம் கற்பிக்கும் முறையில், எடுத்துக் கொண்ட 'ரயில் நிறுத்த' நேரடி நடவடிக்கையாகும். இந்தப் போராட்டத்தின் பலனாகத்தான், நமது தி. மு. கழகத்தின் பலத்தையும், ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி இருக்கும் நிலையையும், ஆச்சாரியார் சர்க்காரால் சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்கமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

தேசிய ஏடுகள் தரும் செய்தி தானே, ஆச்சாரியாருக்கு நாட்டு நிலைமையை உணர்த்தும் காலக் கண்ணாடியாக இருக்கிறது. இந்த அமைதியான ரயில் நிறுத்த நேரடி நடவடிக்கைச் செய்திகள், ஆச்சாரியாருக்கு அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டது. நமது கழக வெளித் தோற்றத்தின் பருமனை, ஓரளவுக்கு ஆச்சாரியார் உணர்ந்து கொண்டார்; ஆயாசப் படுகிறார்—ஆத்திரம் காட்டுகிறார்!

ஆணி வேரை அலசுகிறார்! சல்லி வேருக்கு சல்லடை போடுகிறார்! காங்கிரஸ் களபதிகளுக்கு நமது கழகத்தின்மீது தாக்குதல் நடத்த, பலாத்கார போதனை புரிகிறார்! விரும்பத்தகாத, அநாகரீகமான, காட்டுமுறையை, நாட்டு அரசியல் பொதுவாழ்வில் புகுத்த ஆச்சாரியார் விரும்புகிறார்!

தூத்துக்குடியிலும், டால்மியாபுரத்திலும் இது சம்பந்தமாக ஆச்சாரியார் சர்க்கார் மேற்கொண்ட கொடிய அடக்குமுறை, ஆச்சாரியாருக்கு அந்திய காலத்தில் ஏற்பட்ட மாபெரும் கறையாகும். ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு அவர் தேடிக்கொண்ட மாசு, அவரை பீடிப்பதோடு மட்டும் மறைந்துவிடக் கூடியதல்ல, காங்கிரசையும் களங்கப்படுத்தக் கூடியதாகும். திருவாழத்தான் இருந்தும் கெடுத்தான் இறந்தும் கெடுத்தான் என்பது போல, ஆச்சாரியார் அதிகாரத்தில் இருக்கும் பொழுதும் காங்கிரசுக்கு மாப்பழியைத் தேடிக்கொடுக்கிறார், அரசியல் துறவு பூண்ட பிறகும் பழியை காங்கிரசுக்குச் சொத்தாகச் சேர்த்து வைக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் கருத்து, நமது சொந்தக் கருத்து மட்டும் அல்ல—காங்கிரசின் எதிர் காலத்தில் அக்கறை கொண்டுள்ள பல்லோரின் அசைக்க முடிந்த கருத்து! நிற்க,

ரயில் நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக, நமது தி. மு. கழகத்தின் ஜனசக்தி வெகுவாக விரயமாகி இருக்கிறது என்பதை, நமது தோழர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இந்த சக்திச் செலவு, நமது கழகம் மேற்கொண்ட மற்ற இரு அறப்போராட்டங்களில் செலவழிந்ததைப்போல் அல்லாமல், இப்போராட்டத்தில் மிக மிகப் பரவலாக செலவழிந்து இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

ரயில் நிறுத்த எழுச்சியின் பலனாக, நமது தி. மு. கழகம், இதற்கு முன்னர் புகாத சிறுசிறு பட்டிதொட்டிகளிலும்கூட புகும் அரிய வாய்ப்பினை பெற்றிருக்கிறது என்பது கருதத் தக்கது. எதிர்பாரா வகையில நமக்குக் கிடைத்த இந்த அரிய தருணத்தை, நமது தோழர்கள், கவலையற்று இருந்து வீணாகிவிடக்கூடாது. வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதின்மூலமும், இந்த வருவாய் வாய்க்காலைத் தூர்ந்துவிட விட்டுவிடக் கூடாது. வெள்ளப்பெருக்கெடுத்து ஓடும்போதுதான், நீரை வீணாக்காமல் தேக்கி வைக்க முயல்வது விரும்பக்கூடியதாகும்; வெற்றி தரக்கூடியதுமாகும். கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லையே என்று பின்னர் பிறர் பழிக்கும் அளவிற்கு, நாம் இப்பொழுது உறக்கம் காட்டக்கூடாது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள முந்த வேண்டும் என்ற முதுரையை நாம் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்குறித்த மூன்று அமைதியான அறப்போராட்டங்களில், நாம் நான்கு ஆண்டுகளாக, நமது தோழர்கள் ஒவ்வொருவரும் இடையறாது புரிந்த புனித சேவையின் பயனாக, ஒன்றுதிரண்டு நமது தி. மு. கழகத்தில், தேங்கிக்கிடந்த மக்கள் சக்தியில் குறிப்பிடத்தகுந்த அளவிற்குச் செலவழித்து இருக்கிறோம். இந்த உண்மையை நன்கு கவனத்தில் கொண்டுதான் மேலும் மேலும் நமது சக்தியைச் செலவழிக்கும் பணியில் நமது கழகத் தோழர்கள் ஈடுபட வேண்டும். எந்தப் பணியினை மேற்கொள்ளுவதாக இருந்தாலும், அந்தப் பணியின் விளைவு, நமது கழகத்தின் சக்தியைக் கூட்டுமா, குறைக்குமா என்று நுணுகி நுணுகி ஆராய்ந்து பார்த்தே, இத்தருணத்தில் நமது தோழர்கள் செயல்புரிய முன்வர வேண்டும்.

திராவிட மக்கள் மின்சார ஆக்கிகள்—நமது தி. மு. கழகம் மின்சார தேக்கி என்பதை நாம் நினைத்துப்பார்த்து, மின்சார ஆக்கிகளில் இருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை, வீணாகச் சிதற விட்டுவிடாமல், மின்சாரத் தேக்கிக்கு, இடையறாது ஒழுங்காகக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். அப்பொழுதுதான் மின்சாரத் தேக்கியில் இருக்கிற மின்சாரம் செலவிடச் செலவிடக் குறையாமலும், மேலும் செலவிட்டாலும் அஞ்சத் தேவை இல்லை என்ற துணிவையும் ஒருவரால் கொள்ளமுடியும்.

எனவே, நமது கழகத்தில் எஞ்சியுள்ள சக்தியை, செலவாகும் இனமான ஒன்றிரண்டு எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டு, மேலும் செலவழிக்கும் பணியிலிருந்து, இடைக்கால ஏற்பாடாக விலகிக்கொள்ள வேண்டும் என்று இருதய பூர்வமாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆச்சாரியாரின் அடக்குமுறைகளும், காங்கிரஸ் களபதிகளின் கொலைவினைகளும் மட்டுந்தான் நமது கழகத்தை குலைக்க முயற்சிப்பதாகத் தோழர்கள் எண்ணிவிடக் கூடாது. இந்த இரண்டும் மட்டுந்தான் நமது தி. மு. கழகத்தின் மீது ஏவப்படும் அஸ்திரங்களாக இருக்குமானால், இப்பொழுதும் இந்த இரண்டையும் எதிர்த்து நின்று வெற்றிகாண நமது கழகத்தால் முடியும் என்பதில் எவரும் ஐயம்கொள்ளத் தேவை இல்லை. ஆனால், எதிர்ப்பு இவைகளோடு நின்றுவிடவில்லை.

எப்பொழுது நமது கழகத்தின் கட்டுப்பாட்டைக் குலைக்கலாம், பிளவுபடுத்துவதற்கான அறிகுறிகள் ஏதாவது இருக்கிறதா, என்று சில அரசியல் சிகண்டிகள், விஷமப் பணியினை புரிந்துவருகிறார்கள் என்பதை நமது தோழர்கள் அறிந்து கொள்ளாமல் இல்லை. இந்தச் சிகண்டிகளின் செயல் பற்றியும், உள்ளக் கிடக்கை பற்றியும் நமது கழகத் தோழர்கள் நமக்கு அனுப்பிவரும் செய்திக் கடிதங்கள் நம்மிடம் ஏராளமாகக் குவிந்துகிடக்கின்றன. இவைகளை வெளியிடாததற்குக் காரணமே சிகண்டிகளின் நாச வலையில் நமது கழகத் தோழர்கள் சிக்க மாட்டார்கள் என்று கழகக் கூட்டுத் தோழர்கள் மீது நாம் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையேயாகும், இனியும் நமது தோழர்கள், உறுப்பினர்களைச் சேர்த்தல், மேலும் புதுப்புது கழகங்களை நிறுவுதல், திராவிட மக்களுக்கும் கழகத்திற்கும் உள்ள பாசத் தொடர்பை விரிவாக்குதல், கெட்டிப்படுத்தல், கோட்பாடுகளைப் பரப்புதல் என்பன போன்ற ஆக்க வேலைகளில் ஈடுபட்டு தீவிரப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம். இதுவே, நமது இரண்டாம் கட்டம்; நாம் மேற்கொள்ள வேண்டிய சிறந்த பணி; முதல்தரமான ஆக்க வேலை என்று கூறிக் கொள்ளுகிறோம்.

"சிறை புகுமுன், செய்த பணியும், பெற்ற வெற்றியும் சாமான்யமானவை அல்ல," என்ற திருப்தியுடன் செல்

(அடுத்த பக்கம் பார்க்க)

கத்தோலிக்கரின் கண்ணில் படாமல் மறைந்த நூல்!

கலிலியோவின் வானநூல் 'உரையாடல்' ஜப்பான் நூல் நிலையத்தில் இருக்கிறது

இத்தாலியில் லத்தின் மொழியில் பிரசுரிக்கப்பட்டு, கத்தோலிக்க மத குருமார்களின் அடாத செயலுக்கு ஆட்படாமல், கலிலியோவின் வானநூல் 'உரையாடல்' உருவில் ஜப்பான் ஒசாகா நகரில் உள்ள நூல் நிலையம் ஒன்றில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

நாம் இருக்கும் நிலப்பரப்பை உருண்டையாக இருக்கிறது என்று, ஏற்கனவே இருந்த இறித்துவ கருத்தான தட்டை என்பதற்கு எதிராகக் கூறினதற்காக, அறிஞர் கலிலியோவை, மதவெறியர்கள் கற்களால் அடித்துக் கொன்றனர், என்பது குறிப்பிடத்தக்கது.

30 ஆண்டுகளுக்கு முன்பு, மேற்கூறிய நூல் நிலையத்திற்கு ஒரு பணக்கார வியாபாரி 20,000 நூற்களை இனாமாகக் கொடுத்து உதவினாராம். அவைகளுக்கு ஒழுங்கான அட்டவணை இதுவரையில் தயாரிக்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது சில ஜப்பானிய இலக்கிய ஆயுஞர் ஆராய்ந்து, அப்பழம் பெரும் நூல் கிடைத்திருப்பதை கூறியுள்ளனர்.

பகிரங்க ஏலத்தில் விலையுயர்ந்த பொருள்கள்!

கெய்ரோ, அக். 26—

அடுத்த பிப்ரவரியில், பகிரங்க ஏலத்தில் விற்கப்படவிருக்கும் முன்னாள் எகிப்து மன்னரின் விலையுயர்ந்த பொருள்களில், 10 லட்சம் பவுன் பெறுமான பழைய ஸ்டாம்புகள், வைரங்கள் பதித்த தங்கத் தட்டு, ஒரு தங்கத் தட்டு, இரண்டு தங்கப் பெட்டிகள், 1,200 கடிகாரங்கள், 60 தங்க சிகரெட் பெட்டிகள், விருந்துக்கு உபயோகமாகும் வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவை.

(முன் பக்கத்தின் தொடர்ச்சி)

...கிறேம், விட்ட இடத்திலிருந்து தொடங்கி, வெற்றிப் பாதையில் நடந்து வாகைசூடிடும் ஆற்றல் படைத்தவர்களிடம், கழகத்தை ஒப்படைத்து விட்டு. கழகத்தின் அகமும் புறமும் உங்கட்கு நன்கு தெரியும்-புன்னகைப் புலிகளும், நயவஞ்சக நரிகளும் உலவுகின்றன—எனினும் கடமைக் கணை கொண்டு அவைகளை விரட்டிடும் ஆற்றல் உமக்கு உண்டு; என்பதை உணர்கிறேன், மகிழ்கிறேன்."

"நாங்கள் உள்ளே இருக்கும் போது, கழகத்தின் கண்ணியத்தைப் பன்மடங்கு பொலிவுள்ளதாக்கும் வகையில் பணியாற்றுங்கள்."

"இல்லந்தோறும், நல்லவர் உள்ளந்தோறும் தி மு. க. சென்று இடம் பெற வழி வகை செய்யவேண்டும்."

"கழகத்தின் அன்றாட காரியங்களை, நாங்கள் வெளியே இருப்பதாக எண்ணிக் கொண்டே, எப்போதும் போல் செய்து வாருங்கள். கழக இதழ் 'நம் நாடு' வளரும் ஏடு-அதனை வனப்புள்ளதாக்கும் பெரும் பொறுப்பும் உங்களைச் சார்ந்ததே — அந்தக் கடமையை மறவாதீர்"

என்று நமது பொதுச் செயலாளர் சிறைபுகு முன் கூறிச் சென்ற வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்தி இதை முடிக்கிறேம்.

அரிசி இறக்குமதி மத்திய சர்க்கார் அனுமதி

ரூபாய் 15 கோடிக்கு பாரசீகத்திலிருந்து வாங்கப்படும்

பம்பாய், அக். 26—

பம்பாயிலுள்ள ஹோடி லிமிடெட் என்ற கம்பெனி, பாரசீகத்திலிருந்து ரூ 15 கோடி பெறுமான அரிசியை இறக்குமதி செய்ய மத்திய சர்க்கார் அனுமதியளித்திருக்கிறதாம்.

இந்த அரிசியை, பங்கீடு எடுபட்ட இடங்களில் விற்பனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதாம். முதல் தவணையாக 1000 டன் அரிசி, பாரசீக துறைமுகமொன்றில் கப்பலில் ஏற்ற தயாராக இருக்கிறது இன்னும் ஒரு மாதத்தில் இது இந்தியாவுக்கு வந்து சேரும். அரிசி இறக்குமதி செய்ய, பங்கீடு எடுபட்ட பிறகு, முதன் முதலாக இப்போதுதான் இக்கம்பெனிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பான் விவசாய முறை

பாகிஸ்தான் பின்பற்றும் ?

காரச்சி, அக். 24—

ஜப்பானிய விவசாயமுறையை பின்பற்றுவதற்கான முறைகளை விளக்குவதற்கு, ஜாப் நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று, பாகிஸ்தானுக்கு வரவிருக்கிறது. புது ரகக் கலப்பைகள், மற்றும் இதர சாதனங்களை வரவழைத்து உபயோகித்துக் காட்டப்படும்.

பாகிஸ்தானின் அரிசி உற்பத்தியை அதிகரிக்கவே இம்முயற்சிகள் செய்யப்படுகிறது. தன் அரிசியை ஜப்பான் பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக இயந்திரங்களை அனுப்பும்.

பாகிஸ்தானில் கப்பல் கட்டும் திட்டம்

காரச்சி, அக். 26—

பாகிஸ்தானில் ரூ 590 லட்சம் செலவில் கப்பல் கட்டும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1955 மத்தியில், 2,500 டன் எடையுள்ள முதல் கப்பல் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தூத்துக்குடி வாரம்

தி. மு. கழக கிளைக் கழகத் தோழர்களுக்கு

★

1. நவம்பர் முதல் வாரத்தில், (1-ந் தேதி முதல் 8-ந் தேதிக்குள்) ஒரு நாள், "தூத்துக்குடி நாள்" என்று ஒரு கூட்டம் அவசியம் நடத்த வேண்டும்.
2. அந்தக் கூட்டத்தில், தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, அதில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யும்படி, சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
3. நிறைவேற்றிய தீர்மானத்தை, "கனம். இராசகோபாலாச்சாரியார், முதல் மந்திரி, அரசாங்க மாளிகை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை—9," என்ற முகவரிக்கு உடனடியாகத் தபாலில் அனுப்பி, நகலை, தலைமை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.
4. அன்றைய கூட்டத்திலேயே, தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கி, தோழர்களை விடுதலை செய்யும்படி சென்னைப் பிரதம மந்திரியை கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்று தயாரித்து, அதில், நூற்றுக்கணக்கான கையெழுத்துக்களை வாங்கி, தனியாகப் பிரதம மந்திரி 'முகவரிக்கு' அனுப்பி, கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கையை தலைமை நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி, ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகக் கிளையும் கட்டாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

'அறிவகம்,'
சென்னை,
23—10—53.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சிறைமீண்ட தோழர்களுக்கு பாராட்டு

★

தொண்டைமான்நல்லூர். அக் 24

ரயில் நிறுத்த அறப்போரில் ஈடுபட்டு, மூன்றுமாத சிறைத் தண்டனை பெற்ற தோழர்கள் மூக்கையா, மதிவாணன் ஆகியவர்கள், 20—10—53ல், திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலையாயினர்.

சிறைவாயிலில், தோழர்களுக்கு வரவேற்பும், விருந்தும், தோழர் தொண்டைமான் அவர்களால் தரப்பட்டது. பின்பு மாலை 5 மணிக்கு தோழர்கள் ரயில் மூலம் தொண்டைமான்நல்லூருக்கு அழைத்து வரப்பட்டனர். ரயில் நிலையத்தில், கழகத் தோழர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டு, தேனீர் விருந்தும் அளிக்கப்பட்டபின் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர் இரவு 8 மணிக்கு, பாராட்டுக் கூட்டம், தோழர் சுல்தான் தலைமையில் நடைபெற்றது. சிறைமீண்ட தோழர்களைப் பாராட்டி, தோழர்கள் ரத்தினம், காவேரி, தொண்டைமான் ஆகியோர் பேசினர்.

குளித்தலை

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் 6 வாரம் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையடைந்த தோழர்கள் க. வையமலை, வீ. பாஷா 2 மாத சிறை தண்டனை அனுபவித்து திருச்சி மத்திய சிறையிலிருந்து 19—10—53ல், விடுதலைபடைந்த தோழர்கள் அங்கமுத்து, நல்லமுத்து, ஆர். வேணுகோபால், எம். முருகேசன், பி. திருவேங்கடம் ஆகிய 7 தோழர்களையும் பாராட்டுவதற்காக தி. மு. கழகக் கிளையின் சார்பில் வ. உ. சி. சதுக்கத்தில் தோழர் ஆர். சுந்தரேசன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் எ. பி. தர்மலிங்கம், எஸ். நெடுமாறன், எம்.எஸ். மணி ஆகியோர் சிறைமீண்ட தோழர்களைப் பாராட்டியும், தற்கால அரசியல் நிலையைப்பற்றியும் விளக்கிப் பேசினர்.

திசையன்விளை

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் சிறை சென்ற தோழர்கள் கே. பி. தேசிகன், செல்லையா, பாலு, எஸ். கே. சாமி ஆகிய திசையன்விளை தி. மு. கழகத் தோழர்களுக்கு 22—10—53ல், வரவேற்பும், பாராட்டுக் கூட்டமும் திசையன் விளையில் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு ஒரு ஊர்வலம் செல்வமருதூர் இராமச் சாவடியிலிருந்து புறப்பட்டு பல முக்கிய தெருக்கள் வழியேசென்று கழக மேடையை அடைந்தது. இரவு 7 மணிக்கு தோழர் எம். எஸ். முத்துசாமி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் வின்சென்ட், இராமசுந்தரம், பழனி முதலியவர்கள் பேசியபின், தோழர் வீரபாகு அவர்கள் தி. மு. கழகப் போராட்டங்கள் பற்றியும், சிறை சென்ற தோழர்களைப் பாராட்டியும் விரிவுரையாற்றினார்.

அக்கரை 'அரகரா' என்கிறது! அதிலொன்று 'சிவசிவா' என்கிறது!!

—— (:) ——

கைத்தறியாளர் நிலைகுறித்து சேலத்தில் ஆச்சாரியாரின் 'நீலிக் கண்ணீர்'

சேலம், அக் 25—

மில் துணிகளை வாங்க வேண்டாமென்றும், கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டுமென்றும் ஆச்சாரியார் இங்கு கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், "சென்னை மாநிலம், இங்கு உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை வைத்தே சரிக்கட்டிக் கொள்ளும்; இந்த மாநிலத்திற்கு மில் துணிகளை அனுப்ப வேண்டாம்," என மத்திய சர்க்காரை ஆச்சாரியார் கேட்டுக் கொண்டார்.

"கலர் சேலைகள், கரை போட்ட வேட்டிகள் உற்பத்தியை கைத்தறிக்கு ஒதுக்கும் யோசனையை ஏற்க முடியவில்லையானால், சென்னை மாநிலத்திற்கு மில் வேட்டிகள், புடவைகள் கோட்டாவை அனுப்பாதிருக்குமாறு அண்மையில் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறியுள்ளேன்," என்று சொன்னார்.

"40-வது நெம்பருக்குக் குறைவான நூலை கைத்தறியாளர்களுக்கு பம்பாய் சர்க்கார் ஒதுக்கியுள்ள யோசனை கைத்தறியாளர்களுக்குப் பயன் தராது. என்னால் இயன்ற உதவியை கைத்தறியாளர்களுக்கு செய்ய நான் தவறமாட்டேன்" என்று பேசி முடித்தார்.

கழகக் கூட்டம்

★

மாயூரம்:

29—10—53 வியாழன் மாலை
தலைவர்: ஆர். பழனிச்சாமி
பேச்சாளர்: சி. பி. சிற்றரசு

ஜப்பானில் யுத்த சேதம்

டோக்கியோ, அக் 26—

ஜப்பானில், யுத்தத்தினால் சேதமடைந்த நகரங்களில் 80 சத விகிதம் புனர் நிர்மாண வேலை முடிந்துவிட்டது: இன்னும் 32 லட்சம் வீடுகள் கட்டி முடித்தால் தான் வீட்டுத் தொல்லைகள் தீரும். எல்லா நகரங்களையும் விட ரொம்ப சேதமடைந்த 'யோகோஹாமா', இப்போது, புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது. கப்பற் படை தளமாக இந்நகரம் இருந்ததால் இங்கு அதிக சேதம் ஏற்பட்டது.

"பிரிட்டிஷார் விரட்டப் படுகின்றனர்!"

லண்டன், அக். 26—

"இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள பிரிட்டிஷ் தேயிலை தோட்ட முதலாளிகள் விரட்டப்படுகின்றனர்; இவர்கள் இனிமேல் போர்னியோவில்தான் புதுத் தோட்டங்களைப் பயிரிட வேண்டு"மென்று 'டெய்லி ஸ்கெச்' என்ற பத்திரிகை எழுதியிருந்தது, சுந்தரப்புத்தம் எனது மறுக்கப்படுகின்றது.

தேசியுமா?

புதுடெல்லி, அக். 26—

பழைய பெடரல்கோர்ட் நடைமுறையிலேயே சுப்ரீம்கோர்ட் இப்போதும். பின்பற்றி வருகிறது; வக்கீல்களுக்கு சம்பளம் மொகராக்கணக்கில் வாங்கப்படுகிறது (ஒரு மொகரா என்றால், ரூ. 16-க்கு சமானம்); இனி, இந்திய கரன்ஸியிலேயேதான் சம்பளம் நிர்ணயிக்கப்படும்; புது விதிப்படி எல்லா ஏஜெண்டுகளுமே அட்வகேட்டுகளாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

புதிய வெளியீடு!!

★

தோழியர்
அருண்மொழி,
பி. ஓ. எல்.
தரும் அற்புத ஓவியம்

மன்னிப்பு

விலை ரூபாய் 1—0—0
விற்பனைக் கழிவு 25./.

★

திருச்சி மன்றம்
தெப்பக்குளம் — திருச்சி

"புதிய கல்வித் திட்டம் ஒழிய வேண்டும்"

ஜமால் முகம்மது கல்லூரியில் நமது ஜெயபேரிகை

திருச்சி, அக். 22—

இந்நகர் ஜமால் முகம்மது கல்லூரியின் தமிழ் கழகத்தின் சார்பில், "புதிய கல்வித் திட்டத்தால் நன்மையா; தீமையா" என்ற தலைப்பில் சொற்போர் நிகழ்ந்தது.

கூட்டத்திற்கு, தமிழ்ப் பேராசிரியர் சிவகுருநாதன் எம். ஏ., அவர்கள் தலைமை தாங்கினார்.

கல்வித் திட்டத்தை ஆதரித்து சிலரும், எதிர்த்து மிகப் பலரும் பேசினர்:

முடிவில் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதில், 7 மாணவர்கள் திட்டத்தை ஆதரித்தும், 100 மாணவர்கள் திட்டத்தை எதிர்த்தும் வாக்களித்தனர்.

இறுதியில், செயலாளர் ஆர். ஏ. சலாம் நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

தி. மு. கழக செயற்குழு கூட்டங்கள்

★

பெண்ணாடம்

18—10—53ல், தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் தோழர் கே. பெரியதம்பி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, இதுவரை நடந்த வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. தோழர்கள் ம. இரெங்கநாதன், கா. ரெசாக், கா. அப்பாஸ், கூ. அப்துல் சத்தார் ஆகியவர்களை உறுப்பினர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், திரு. வி. க. மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தும், ஆட்சியாளர் போக்கைக் கண்டித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அபிவிருத்தீசுரம்

19-10-53-ல், தோழர் எஸ். பாப்பையன் தலைமையில தி. மு. கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அம்மாபேட்டை

22-10-53-ல், சேலம் டவுன் அம்மாபேட்டை 22-வது வார்டு தி. மு. கழக செயற்குழு கூட்டம் தோழர் எம். அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாச்சியார்கோயில்

21-10-53-ல், தி. மு. கழக உறுப்பினர் அவசரக் கூட்டம் செயலாளர் இல்லத்தில் நடைபெற்றது. அதுசமயம் திரு வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. அவரது தொண்டினை விளக்கி தோழர் தி. ராமசாமி பேசினார். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காங்கேயம்

22-10-53-ல் தோழர் வேலுசாமி தலைமையில், தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, மாவட்டக் குழுவின் உத்திரவுப்படி, தோழர் முத்தியாலு செயலாளர் பொறுப்பை, துணைச் செயலாளர் ஏ. எஸ். நாதன வசம் ஒப்படைத்ததைக் கமிட்டி ஏகமனதாக அங்கீகரித்தது.

நாகப்பட்டினம்

18—10—53-ல், தோழர் கே. பாப்பையன் இல்லத்தில், தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கழக ஆக்கவேலைகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

43-வது வட்ட தி. மு. க. தோழர்கள் வழக்கு

சென்னை, அக். 26—

13—10—53ல், மீர்சாகிப் பேட்டையில், தடையை மீறி கூட்டம் நடத்தியதற்காக 3-வது மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், தோழர்கள் டி. எ. வெங்கடாசலம், மா. பொ. வேதாசலம், உ. எ. துரை, வி. கன்னியப்பன், சி. மூர்த்தி, ஆகியோர்மீது நகர போலீஸ் விதி 41, 71-வது பிரிவுகளின்படி தொடரப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தோழர் மா. பொ. வேதாசலம் வராததால் வழக்கு 31-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

* * *

8-வது வட்ட தி.மு. கழக தோழர்கள் வழக்கு

சென்னை, அக் 26—

8-வது வட்ட தோழர்கள் தடையைமீறி கூட்டம் நடத்தியது குறித்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் கலந்து கொள்ளாத தோழர் பாலசுந்தரத்தின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

* * *

37-வது வட்ட தி.மு.கழக தோழர்கள் வழக்கு

சென்னை, அக். 26—

தடையை மீறி, இராயப் பேட்டையில், 24—9—53-ல், கூட்டம் நடத்தியதற்காக தோழர்கள் பொ. கா. சண்முகம், மா. சி. இராமலிங்கம், தா. வெற்றிவீரன், கிருட்டிண மூர்த்தி, வி. என். கண்ணன் ஆகியோர் மீதும், பாண்டியன் பகுத்தறிவு கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் எம். தாஸ், பி. நாகராசன், ஏ. செல்வம் ஆகியோர் மீதும் நகர போலீஸ் விதி 41, 71-வது பிரிவுகளின்படி தொடரப்பட்டிருந்த வழக்கு, 3-வது மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தோழர் தா. வெற்றிவீரன் கோர்ட்டிற்கு வாராததால் வழக்கு 31-ந் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. தோழர் தா. வெற்றிவீரன் மீது 'பிடி வாரண்ட்' உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெறும் விளம்பரப் பிரியருக்கே

திட்டமாம் திட்டம்!

புதுடெல்லி, அக். 26—

நாட்டின் தொழில் வசதிகளையும், சாதனங்களையும் உயர்ந்த அளவிற்குப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்து, ஆரம்பத்தில் ஆண்டுக்கு 5 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்படி செய்து, அதன் பின் 10 லட்சம் பேருக்கு புதிய வேலைகள் கொடுப்பதே திட்டக் குழு வகுத்து வரும் இரண்டாவது 5 வருடத் திட்டத்தின் முக்கிய கருத்தாகும்.

இத்திட்டத்தின் கீழ் கிராமக் கல்விகளுக்கு போதிய வசதியளிக்கப்படும். மூலப் பொருள்கள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்படும். கிராம முன்னேற்றத்திற்கான அரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசுகள் திட்டங்களை உத்தேசமாக வகுத்தனர். அவைகளை மாவட்டவாரி பிரிப்பதில் பூரண வெற்றி பெறவில்லை.

இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தின்கீழ் பிரதேச திட்டமே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

விளம்பரத்தில் வெறுப்பு!

'மாநாடு மாநாடு என்று இனி மூச்சைத் திணரடிக்க வேண்டாம்'

அமைதியாகப் பணி புரிவதில் நேருவுக்கு ஆசை பிறந்திருக்கிறது

டெல்லி, அக். 26—

"தற்போது மாநாடுகள் நாளுக்கு நாள் அதிகமாகின்றன மக்களிடையே அது ஒரு பழக்கமாகவே மாறிவிட்டிருக்கிறது. மூச்சுவிடக்கூட நேரமின்றி தொடர்ந்து அவை நடைபெறுகின்றன. உண்மையிலேயே இதற்கு ஒரு முடிவு காண காலம் வந்துவிட்டதாக நினைக்கிறேன் கொஞ்ச காலத்திற்கு மாநாடுகள் நடைபெறக் கூடாது. மக்கள் அமைதியாக வேலை செய்ய வேண்டும்."

—இவ்வாறு பண்டித நேரு, மத்திய, நீர்ப்பாசன, மின்சார போர்டின் 24-வது வருடாந்திர கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், "நீண்டகாலம் பயிற்சிபெற்ற சிறந்த இஞ்சினியர்கள், இந்தியாவின் புதிய நிர்மாணத்திற்கு தேவைப்படுகிறார்கள். இரண்டாந்தர மூன்றாந்தர மாணவர்களையோ—வெளி நாட்டாரையோ கொண்டிருப்பதோடு இந்தியா திருப்திபட்டுவிட முடியாது. வருகிற ஐந்து அல்லது பத்தாண்டுகளில், முதல்தரமான இஞ்சினியர்களின் சேவை இந்தியாவுக்கு இன்றியமையாததோடு பெரும் அளவிலும் தேவை" என்று குறிப்பிட்டார்.

"வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டிருப்பதோடு நாம் திருப்திபட்டுவிட முடியாது என்று கூறுவதாலேயே அவர்கள் கூடாது என்று நான் எதிர்க்கவில்லை பெரிய அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்ற குறிப்பிட்ட திறமை பெற்ற இந்தியர்கள் இல்லை என்றால், வெளிநாட்டு நிபுணர்களை நாம் பெறுவதை தவிர்க்க முடியாது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

அணுசக்தியிலிருந்து மின்சார உற்பத்தி

நியூயார்க், அக். 26—

அணுசக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்து, சுமார் நான்கு லட்சம் ஜனத்தொகையுள்ள ஒரு நகருக்கு சப்ளை செய்ய அமெரிக்க அணுசக்தி கமிஷன் திட்டமிட்டிருக்கிறது.

பூரியாரின் புதிய ஏற்பாடு

நாகபுரி, அக் 26—

'விஸ்வ புனர் நிர்மாண சங்கம்' என்ற பெயரில் உலக புனரமைப்பு சங்கம் ஒன்றை பூரி சங்கராச்சாரியார் நேற்று ஆரம்பித்து வைத்தார். இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கம், உலக மக்களின் துயரத்தைத் துடைப்பதாம். இதில் நிதி அமைச்சர் தேஷ்முக், மற்றும் பல நீதிபதிகள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

'தொன்மை மிகுந்ததும், தொடர்பறாத உயிருள்ளதுமானது தமிழ்மொழிதான்'

பம்பாய் தமிழ் மாநாட்டில் தோழர் பட்டீல்

பம்பாய், அக் 22—

பம்பாயில் நடந்த மூன்றுநாள் விழாவாக கொண்டாடப்பட்டுவரும் 'பாரதி மாநாடு' இம்முறை 'தமிழ் மாநாடு' என்ற பெயரால் பம்பாய் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 16, 17, 18 தேதிகளில் நடைபெற்றது. விழாவிற்கு டி. பி. மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். விழாவில் கலந்துகொண்ட பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எஸ். கே. பட்டீல்பேசுகையில் "இலக்கிய வளம் செறிந்த தமிழ் மொழியின்பால் தமக்கு என்றுமே பெருமதிப்பு உண்டு மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்பு அறாத உயிருள்ள மொழி உலகத்திலே ஒன்று உண்டென்றால், அப்பெருமை தமிழுக்கே உரித்தாகும்" என்று கூறினார்.

தென்னாட்டு ஓவியர்களான பாலு சகோதரர்களின் ஓவியங்களைத் திறந்து வைத்து, முன்னாள் கவர்னர் ஹெ. சி. பி மோடி பேசுகையில் "தமிழ்நாடு இணைந்து வரப்பெற்றுள்ள தென்னாட்டுச் சித்திர சிற்பக் கலைகள், நமது இயந்திரக் கலாச்சாரத்திற்கே மூலாதாரமாகும்" என்றார்.

கல்லக்குடி ஆர்ப்போர்

★

இன்று

107-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

106-வது நாள்

இந்தியா வகுத்த திட்டம்

பாக்தாத், அக் 25—

அரபுகளை ஆதரிக்கவும், ஆசிய அரபு குழுவுகளை ஆதரிக்கவும், இந்தியா ஒரு திட்டதை வகுத்திருப்பதாக, இந்தியாவின் இராக் ஸ்தானிகர் கூறியுள்ளார்.

'காங்கிரஸ் தகராறுகளில் கலக்கக் கூடாது'

இ. தே. தொ. ச. கா வில் முடிவு

ஹைதராபாத், அக். 26—

இங்கு நடைபெற்ற இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸின் இரண்டாவது நாள் கூட்டம் இன்று முடிவடைந்தது. இந்த மன்றத்தின் கிளைகள், உறுப்பினர்கள் காங்கிரசின தகராறுகளில் கலந்து கொள்ளக் கூடாதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசியலிலும் கலந்து கொள்ளக் கூடாதென முடிவு செய்யப்பட்டது.

டாக்டர் ஜகான் இந்தியா வருவாரா ?

லண்டன், அக் 26—

பிரிட்டிஷ் கயானா முன்னாள் பிரதமர் டாக்டர் ஜகான் குழப்பத்தில் இருப்பதாகவும், இந்தியாவுக்குச் செல்வதால் தனக்கு நன்மை ஏற்படுமாவென்று சந்தேகிப்பதாகவும் தெரிகிறது.

திருமணங்கள்

28—10—53 காலை 6 மணியளவில், வண்ணை—5, மாடசாமி நாடார் தெருவில் தோழர் கே. என். பாலகிருஷ்ணனுக்கும், தோழியர் கோமளவல்லிக்கும் தோழர் பி. வி. முத்துசாமி தலைமையில் திருத்திய திருமணம் நடைபெறும். தோழர்கள் கோ. இறைமுடிமணி, எம். கே. டி. சுப்ரமணி, எம். கே. அண்ணாமலை தனுஷ்கோடி பேசுவர்.

• • •

28—10—53ந் தேதி காலை, கடலூர், ஓ. டி. மோகன் சிங் தெருவில் தோழர் திருக்குறள் வி. முனுசாமி தலைமையில் தோழர் கி. தண்டபாணிக்கும், தோழியர் கோ. ஞானசவுந்தரிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அதுபோது தோழர்கள் எ. கோவிந்தசாமி, இரெ. இளம்வழுதி, நடிகர் டி. எஸ். துரைராஜ், எம். எம். மாரியப்பா ஆகியோர் பேசுவர்.

பிரபல திருமணம்

விருதுநகர், அக். 25—

இம்மாதம் 18-ந் தேதி இந்நகர் பிரபல வியாபாரியும், நமது இயக்க அபிமானியுமான தோழர் வி. ச. எம். இரத்தினம் அவர்கள் சகோதரர் வெள்ளையப்பன் அவர்களின் மகனும் தி. மு. க. தோழருமான குருகுணப்பனுக்கும், "தமிழ்த் தென்றல்" ஆசிரியர் திரு. வே. வ. இராமசாமியின் மகள் தோழியர் மணிக்கிளிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் இனிது நடந்தேறியது.

ரிட்டையர்டு ஜட்ஜ் எஸ். நடராஜன், நெல்லை மாஜிஸ்திரேட் அய்யாசாமி, ஆர். வி. சுவாமிநாதன், எம். எல். ஏ., மற்றும் உள்ளூர், வெளியூர் பிரமுகர்களும திருமணத்தில் கலந்து கொண்டனர். மந்திரி கிருஷ்ணராவ், 'நம் நாடு' பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார் மற்றும் பெரிய கம்பெனிகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன. இதன் நினைவாக, நம் நாடு வளர்ச்சிக்கு மணமகன் ரூபாய் ஐந்து அனுப்பியுள்ளனர்.

இந்த ரூ. 5-ம் வரப்பெற்றோம் —நன்றியுடையது— பொறுப்பாளர்.

எதற்கோ ?

ஐரோப்பிய நாடுகளில், 160 கோடி டாலர் பெறுமான யுத்த தளவாடங்கள் உற்பத்தி செய்ய அமெரிக்கா ஆர்டர்கள் கொடுத்ததாக அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.